
# அம்மாக் கோழியும் அப்பாச் சேவலும்



JPL
C13187

செ.அன்புராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாக் கோழியும் அப்பாச் சேவலும்

பொதுசனநூலகம்
10 JUN 2020
மாநகரசபை
யாழ்ப்பாணம்

செ.அன்புராசா

KOHA
JPL

131870 CC

முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம்
2018

தலைப்பு : அம்மாக் கோழியும் அப்பாச் சேவலும்
விடயம் : சிறுவர் கதை
நூலாசிரியர் : செ.அன்புராசா
ஓவியம் : டோமினிக் ஜீவா
வெளியீடு : முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம்
பதிப்பு : 2018
கணினி வடிவமைப்பு : கி.வினுஷாந்
அச்சகம் : யாழ்.கத்தோலிக்க அச்சகம்
விலை : 400ரூபா

Title : Ammaak Koliyum Appaach Chevalum
Subject : Children Story
Author : S.Anpurasa
Drawing : Dominic Jeeva
Publication : Murunkan Muththamilk Kalamandram
Edition : 2018
Computer Design : K.Vinushanth
Printers : Catholic Press, Jaffna
Price : 400Rs

ISBN 978-955-4609-03-7

276736

276736 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

594.8113

# அணிந்துரை

அப்பழுக்கில்லாத சின்னஞ்சிறு மனங்களை நெறிப்படுத்தும் சிறுவர் இலக்கியம் மிகவும் நுட்பமானது. சிறுவர்களின் மென்மையான உணர்வுகள் மதிக்கப்பட்டு, அதிலே செம்மையான மனிதாபிமான சிந்தனைகளும், தகவல்களும், விதைக்கப்படுவதாகவே இவை வடிவமைக்கப்படுகின்றன. இவை, ஓர் இலகுவான முயற்சி அல்ல. ஆனால், அருள்திரு செ.அன்புராசா அடிகளாரின் படைப்புகள் அவருக்கு இத்துறையில் இருக்கும் திறனையும் முதிர்ச்சியையும் பறைசாற்றி நிற்கின்றன.

'அம்மாக் கோழியும் அப்பாச் சேவலும்' என்ற அவரின் இந்த ஆக்கத்திலே அன்னையின் அன்பும் அரவணைப்பும், தந்தையின் பரிவும் பாதுகாப்பும், பிள்ளைகளின் பொறுப்புணர்வின் முக்கியத்துவமும், குடும்ப ஒற்றுமையும் சிறுவர்களின் பிஞ்சுமனங்களிலே பதியும் வகையில் பொருத்தமான சித்திரங்களுடன் அழகாக விபரிக்கப்பட்டிருக்கின்றது.

அருள்திரு செ.அன்புராசா அடிகளாரின் இலக்கியப்பணி அளப்பரியது. அவருடைய மொழிப்பற்று, சமூகப்பற்று, பரிவு, பாசம் அனைத்தும் அவரின் எல்லா ஆக்கங்களிலும் தெளிவாகத் தென்படுகின்றன. சின்னச் சின்ன வரிகளில் தொனிக்கும் சுவையும் சொல்லாட்சியும், மக்களின் மனதிலும் சிறுவர்களின் உள்ளத்திலும், அறத்தையும் அன்பையும் ஆழப்பதிய வைக்கும் என்பதில் ஐயம் இல்லை. அவருடைய இலக்கியப்பணியும் சமூகப் பணியும் தொடரும் என்ற நம்பிக்கையுடன் அவருடைய முயற்சிகள் சிறக்க வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றேன்.

**சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**
**யாழ்.போதனா வைத்தியசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

சமய சமூக கலைப் பணிகளில் சிறுவயது தொடக்கம் இயல்பாகவே எனக்கு ஈடுபாடு இருந்து வருகிறது. ஆனால், எழுத்துத் துறையில், இலக்கியத்துறையில் அதிக ஈடுபாடு காட்டத் தொடங்கியது முப்பதுவயதான பின்னர் தான். எனினும், என் குடும்பப் பின்னணி, வாழ்ந்த சூழல், பெற்றுக்கொண்ட அநுபவங்கள் ஏதோ ஒரு வகையில் இத்துறைக்குள் என்னை இழுத்து வந்தன.

இது இவ்வாறிருக்கையில், மாறிவரும் சூழலில் சிறுவர் பற்றிய அக்கறை, அவர்கள் பற்றிய இலக்கியச் சிந்தனை என்னுள் இருந்தபோதிலும், சிறுவர் இலக்கியங்களைப் படைக்கவேண்டும் என இற்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன் எண்ணியதில்லை. இருப்பினும், சிறுவர்கள் இன்றைய சூழலில் எதிர்கொள்ளும் சவால்களையும், அவர்களின் எண்ணங்களையும், சிறுவர்களுடனான என் அனுபவத்தையும் ஏதோ ஒருவகையில் பகிரவேண்டும் என்ற எண்ணம் இத்துறையினுள்ளும் என்னை ஈர்த்தது. அவ்வகையில் 2016இல் **'சிறகடிக்கும் சிட்டுக்கள்'** என்ற சிறுவர் கவிதை நூலை சிறுவர்களுக்காகப் படைத்தேன். 2017இல் **'வாழத்துடிக்கும் வடலிகள்'** என்ற நூலை சிறுவர்கள் பற்றிய இலக்கியமாக ஆக்கினேன். தொடர்ந்து, இவ்வாண்டு 2018இல் **'அம்மாக் கோழியும் அப்பாச் சேவலும்'** என்ற சிறுவர் கதையினைப் படைத்துள்ளேன்.

சிறுவர் கதைகளை எழுத எனக்கு உந்துசக்தியாக இருந்தவர் ஈழத்தில் சிறுவர் இலக்கியத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவரும் இத்துறையில் நன்கு அறியப்பட்டவருமான கலாநிதி ஓ.கே.குணநாதன் ஆவார். அவருடனான அறிமுகமும் கருத்துப் பகிர்வுகளும் இத்துறையில் எனக்கு புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்தது. அவ்வகையில், கலாநிதி ஓ.கே.குணநாதன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

மேலும், இச்சிறுவர் கதை நூலுக்கு மிகப் பொருத்தமான ஓர் அணிந்துரையினை மனமுவந்து தந்து என்னை ஊக்கப்படுத்திய யாழ்.போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் மதிப்புக்குரிய சி.சிவன்சுதன் அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள். இன்னும், இந்நூலுக்கு அழகான படங்களை வரைந்துதவிய ஆசிரியர் டொமினிக் ஜீவா, கணனி வடிவமைப்பாளர் கி.வினுஷாந், புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளர் அருள்தந்தை எயின்சிலி றொஷான் ஆகியோருக்கும் என் நன்றிகள் உரித்தாகுக.

**செ. அன்புராசா**
**அலைபேசி : 0778 648 548**
**மின்னஞ்சல் : anpuomi1970@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாக் கோழிக்குப் பத்துக் குஞ்சுகள் இருந்தன.
அவை சின்னஞ் சிறு குஞ்சுகளாய் இருந்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாக் கோழி உணவைத் தேடிக் கண்டுபிடிக்கும்.
குஞ்சுகளோடு உணவைப் பகிர்ந்து மகிழும்.
ஆதலால், அம்மாக் கோழியோடு குஞ்சுகளும் மகிழ்ந்திருந்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாக் கோழி, உணவைத் தேடிக்கொள்ள,
குஞ்சுகளுக்குப் பயிற்சி கொடுத்தது.
தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் சொல்லிக் கொடுத்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘வெளியே போய் வரலாம்’ என அனுமதியும் வழங்கியது.
வெளியே போகும்போது, தெரியப்படுத்தும்படி
அம்மாக் கோழி கூறியிருந்தது.



KOHA
பொதுசன நூலகம்
10 JUN 2020
மாநகரசபை
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அம்மாக் கோழி, உணவுதேடி, அடிக்கடி வெளியே போய்வரும். இந்நேரங்களில், இரண்டு குஞ்சுகள் தாயிடம் சொல்லாமல் கொள்ளாமல், வெளியே செல்ல ஆரம்பித்தன. அம்மாக் கோழிக்கு இது தெரியாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரண்டு குஞ்சுகளும், தம்பாட்டிற் சென்று வருவதைப்
பருந்தும் பூனையும் பாம்பும் பார்த்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள், பருந்தார் வானில் பறந்து வந்தார். வெளியே சென்ற அம்மாக் கோழி, 'குஞ்சுகளுக்கு ஆபத்து ஏற்படலாம்' என எண்ணியது. உடனடியாகவே வீடு திரும்பியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு குஞ்சுகள் வீட்டில் இல்லாததால்,
அம்மாக் கோழி அங்கலாய்த்துப் போனது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

276736

வானில் வட்டமிட்டுக் கொண்டிருந்தார் பருந்தார்.
அவர் நோட்டமிடும் இடம்நோக்கி, அம்மாக் கோழி ஓடிச் சென்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாக் கோழியின் ஆவேசத்தைக் கண்ட பருந்தார்,
பறந்து போனார்.



பொதுசனநூலகம்
10 JUN 2020
மாநகரச
யாழ்ப்பாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாக் கோழி, ஓடிச்சென்று, இரண்டு குஞ்சுகளையும் அரவணைத்துக் கொண்டது. மூவரும் வீடுநோக்கிப் புறப்பட்டார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு சகோதரர்களையும் அம்மாக் கோழியையும் காணவில்லை. ஏனைய எட்டு குஞ்சுகளுக்கும் சரியான கவலை. வீட்டை விட்டு, வெளியே வந்து, அவர்களைப் பார்த்துக்கொண்டு நின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13187CC

276736

அப்போது, ஒரு பாம்பார் வந்து கொண்டிருந்தார்.

KOHA JPL





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பைக் கண்ட குஞ்சு ஒன்று, ‘கீச் கீச்’ எனக் கத்தியது.
அயல் வீட்டில் அப்பாச் சேவல் நின்றது ‘கீச் கீச்’ என்ற சத்தத்தைக் கேட்ட அப்பாச் சேவல், ‘கொக் கொக்’ எனச் சத்தமிட்டபடி குஞ்சுகளிடம் பறந்து வந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாச் சேவலைக் கண்ட பாம்பார், ஓடித் தப்பினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாக் கோழியும் இரண்டு குஞ்சுகளும் வீடு வந்து சேர்ந்தன. அம்மாக் கோழியையும் இரண்டு சகோதரர்களையும் கண்டதால் எல்லாருக்கும் மகிழ்ச்சி. வீட்டில் நடந்தவற்றை, எட்டுக் குஞ்சுகளும் தாயிடம் கூறின. அம்மாக் கோழி, குஞ்சுகளைக் கட்டி அணைத்து முத்தமிட்டது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

276736

அன்றைய நாள் அவர்களுக்கு உணவில்லை.
அம்மாக் கோழியும் குஞ்சுகளும் உணவு தேடப் புறப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வீட்டில், நிறையத் தேங்காய்ப்பூ சிதறிக் கிடந்தது.
எல்லாரும் மகிழ்ச்சியாக உண்ணத் தொடங்கினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென ஒரு பூனையார் வந்தார். குஞ்சுகளைப் பார்த்தார்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அம்மாக் கோழி, 'கொக் கொக்' எனக் குரல் எழுப்பியது. பூனையார், தன் வழியே போய் விட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

276736
KOHA JPL

குஞ்சுகள், அம்மாக் கோழியின் அரவணைப்பில் ஆனந்தமாய் வாழ்ந்தன. அப்பாச் சேவலின் பாதுகாப்பில் அன்புடன் வளர்ந்தன.



10 JUN 2020
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரையிலிருந்து...



'அம்மாக் கோழியும் அப்பாச் சேவலும்' என்ற அன்புராசா அடிகளாரின் இந்த ஆக்கத்திலே அன்னையின் அன்பும் அரவணைப்பும், தந்தையின் பரிவும் பாதுகாப்பும், பிள்ளைகளின் பொறுப்புணர்வின் முக்கியத்துவமும், குடும்ப ஒற்றுமையும் சிறுவர்களின் பிஞ்சு மனங்களிலே பதியும் வகையில் பொருத்தமான சித்திரங்களுடன் அழகாக விபரிக்கப்பட்டிருக்கின்றது.

அருள்திரு செ.அன்புராசா அடிகளாரின் இலக்கியப்பணி அளப்பரியது. அவருடைய மொழிப்பற்று, சமூகப்பற்று, பரிவு, பாசம் அனைத்தும் அவரின் எல்லா ஆக்கங்களிலும் தெளிவாகத் தென்படுகின்றது. சின்னச் சின்ன வரிகளில் தொனிக்கும் சுவையும் சொல்லாட்சியும், மக்களின் மனதிலும் சிறுவர்களின் உள்ளத்திலும், அறத்தையும் அன்பையும் ஆழப்பதிய வைக்கும் என்பதில் ஐயம் இல்லை.

சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்
யாழ்.போதனா வைத்தியசாலை

## ஆசிரியரின் ஏனைய நூல்கள்

மறைப்பணி புரிந்த மாமேதை(2001), காலத்தின் பதிவுகள்(2002), சுனாமி சொல்லாத சோகங்கள்(2005), நம்பிக்கையின் பாதையில்(2005), மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள்(2007), லூர்து நம்பிக்கை தரும் நகர்(2009), திருப்பத்திற்கான தேடல்கள்(2013), அதிர்வுகள்(2014), சிறகடிக்கும் சிட்டுக்கள்(2016), வாழத்துடிக்கும் வடலிகள்(2017), மனுவுக்கு மனு!(2018), அம்மாக் கோழியும் அப்பாச் சேவலும்(2018), அதிர்வுகள்-02(2018), Mother Hen and Father Cock(2018).

9 789554 609037

விடயம்: சிறுவர் கதை

வெளியீடு: முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம், 2018

விலை: 400 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org